**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நத்தம்.</u>**

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | : 73/2015 | வா.சா. | : 1 |
| பெயர் | : அறிவழகன் | த/பெ. | : சுப்பிரமணி |
| தாலுகா | : நத்தம் | கிராமம் | : நத்தம் கோவில்பட்டி |
| தேதி | : 10.07.2026 | வயது | : 57/2026 |

1969–ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு .44–ன் படி சாட்சி அழைக்கப்பட்டு உறுதியுரை செய்யப்பட்டு அளித்த சாட்சியம்:

**<u>இ.ம.எண்.10/2026 மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

13) வா.சா.ஆ.10 முதல் வா.சா.ஆ.19 வரையிலான ஆவணங்களை தாசில்தார் அவர்கள் குறுக்கு விசாரணையின்போது எனது தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்யும்போது மேற்படி ஆவணங்கள் எனது வசம் இருந்ததா என்றால் இல்லை. மேற்படி ஆவணங்கள் எப்போது உற்பத்தி செய்யப்பட்டது என்றால் வழக்கு சொத்துக்கள் பல சொத்துக்களை அடங்கி இருப்பதால் எனது சித்தப்பா, பெரியப்பா மக்களிடம் இருந்து கேட்டு வாங்கி தாக்கல் செய்துள்ளேன். மேற்படி ஆவணங்கள் எனது வழக்கிற்கு சம்பந்தப்பட்டதா என்றால் ஆமாம். வா.சா.ஆ.10 ஆவணமானது மனைவரி தோராயப்பட்டா ஆகும். மேற்படி பட்டாவில் சர்வே எண் யாருக்கு ஒதுக்கப்பட்டது என்ற விபரம் தெரிவிக்கப்பட்டிருக்கும். மேற்படி ஆவணத்தில் சர்வே எண்.531/34க்கு பழைய புல எண்.212/14பா ஆனது 0.0039 ஏர்ஸ் விஸ்தீரணம் நல்லதம்பியா பிள்ளை மக்கள் 1.சிதம்பரம், 2. அருணாச்சலம், 3. சுப்பிரமணியன் ஆகியோர் பெயரில் பட்டா எண்.822 என்று தாக்கலாகியுள்ளது.

14) வா.சா.ஆ.11 மனைவரி தோராய பட்டாவானது சர்வே எண்.531/35 பழைய புல எண்.212/14பா பட்டா எண்.897 விஸ்தீரணம் 0.0036 ஏர்ஸ் ஆகும். வா.சா.ஆ.12 மனைவரி தோராய பட்டாவானது சர்வே எண்.531/36 பழைய புல எண்.212/12பா பட்டா எண்.898 விஸ்தீரணம் 0.01.30 ஏர்ஸ் ஆகும். மேற்படி

தோராய பட்டாக்கள் இந்த வழக்கிற்கு எதற்காக அவசியம் என்றால் வழக்கு சொத்துக்களான சர்வே எண்.531/34, 35, 36 அதற்குரிய ஆவணங்கள் என்பதால் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி 3 ஆவணங்களும் எந்த தேதியில் வருவாய் துறையில் இருந்து கொடுக்கப்பட்டது என்றால் 20.10.1991ம் தேதியில் கொடுக்கப்பட்டுள்ளது. மேற்படி ஒவ்வொரு ஆவணங்களிலும் தனி வட்டாட்சியர் மற்றும் தயாரித்தவர் என்ற காலத்தில் உள்ள கையொப்பங்கள் ஒவ்வொரு விதத்தில் உள்ளது என்றால் சரியல்ல. எதற்காக லேமினேட் செய்யப்பட்டுள்ளது என்றால் நான் லேமினேட் செய்யவில்லை, என் சித்தப்பா, பெரியப்பா லேமினேட் செய்து வைத்திருந்ததை கொடுத்தார்கள். மேற்படி மூன்று ஆவணங்களும் வழக்கு தாக்கல் செய்ததற்கு பிறகு உற்பத்தி செய்யப்பட்ட போலி ஆவணங்கள் என்றால் சரியல்ல.

15) மனைவரி தோராய பட்டா என்றால் புஞ்சை நிலங்களை வகைப்படுத்துவதற்காக வழங்கப்படும் பட்டா ஆகும். மனை வரி தோராய பட்டா ஆனது அரசு நிலத்திற்கு வழங்கப்படுமா அல்லது தனியார் நிலத்திற்கு வழங்கப்படுமா என்றால் அது பற்றி தெரியாது, எனது நிலம் பட்டா நிலம் ரயத்துவாரி புஞ்சையாக இருந்ததை வகைப்பாடு செய்து பட்டாவாக கொடுத்துள்ளார்கள். மேற்படி தோராய பட்டாவில் கண்ட இடங்களுக்கு பத்திரங்கள் உள்ளதா என்றால் எனது அப்பா தாத்தா வழி பூர்வீக சொத்து. பூர்வீக சொத்து என்பதை காண்பிக்க கூடிய ஆவணங்கள் உள்ளதா என்றால் ஆவணங்கள் உள்ளதா என்று எனக்கு தெரியாது. கிரைய ஆவணங்களை காட்டாமல் மேற்படி தோராய பட்டா எவ்வாறு வழங்கப்பட்டுள்ளது என்றால் நூறாண்டுகளுக்கு மேல் அனுபவத்தில் எங்கள் வழி வகையறா இருந்து வருகிறோம், ஆவணங்கள் உள்ளதா இல்லையா என்று தெரியவில்லை, தேடியதில் கிடைக்கவில்லை. அனுபவத்தில் உள்ளதாக தான் மேற்படி வா.சா.ஆ.10 முதல் 12 வரையிலான ஆவணங்கள் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, இதற்கு முன்பே உள்ள பட்டா என்பதாக பட்டா எண்.723, சர்வே

எண்.212/12 என்று பழைய புல எண் குறிப்பிட்ட பட்டாவையும், அ பதிவேடையும் வா.சா.ஆ.18, 19ஆக கணிணி நகலை தாக்கல் செய்துள்ளேன். மேற்படி வா.சா.ஆ.10 முதல் 12 மூன்று பட்டாக்களும் வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்பதால் தான் என்னால் பழைய கைப்பட எழுதப்பட்ட பட்டாக்களை தாக்கல் செய்ய இயலவில்லை என்றாலும் சரியல்ல.

16) வா.சா.ஆ.13, 14 ஆனது வழக்கு சொத்துக்களான சர்வே எண்.531/35, 36 புஞ்சை நிலத்திலிருந்து வகைப்பாடு செய்து உட்பிரிவு செய்யப்பட்டதற்கு கொடுக்கப்பட்ட அறிவிப்பு ஆகும். மேற்படி ஆவணங்கள் எந்த தேதியில் கொடுக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் 14.06.1993ம் தேதி கொடுக்கப்பட்டதாகவும், தயாரித்தல் மற்றும் சரிபார்த்தல் என்று 08.03.1993ம் தேதி குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி இரண்டு ஆவணங்களிலும் உள்ள கையொப்பங்கள் முரண்பட்டு உள்ளதால் உற்பத்தி செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்த காலகட்டத்தில் மேற்படி ஆவணங்கள் என் வசம் இல்லை என்றாலும், தற்போது மேற்படி ஆவணங்களை உற்பத்தி செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

17) வா.சா.ஆ.15 நத்தம் நிலவரித் திட்ட படிவம் 1 ஆவணமானது சர்வே எண்.531/38க்குரிய ஆவணம் ஆகும். மேற்படி ஆவணமானது மேற்படி சர்வே எண்ணிற்கு அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது போல் மற்ற சர்வே எண்களுக்கும் வழங்கப்பட்டது என்பதற்காக தாக்கல் செய்துள்ளேன். சர்வே எண்.531/38க்கான ஆவணம் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் தனி வட்டாட்சியர் கையொப்பம் செய்த தேதி பார்த்தால் சொல்லும் வகையில் உள்ளதா என்றால் இல்லை, தண்ணீர் பட்டு சிறிது அழிந்துள்ளது. ஆனால் மேற்படி ஆவணத்திற்கு கீழே தயார் செய்யப்பட்டது என்று 16.08.1991 என குறிப்பிடப்பட்டுள்ளது.

18) வா.சா.ஆ.10 முதல் 15 வரையிலான ஆவணங்கள் என்னால் சட்ட விரோதமாக உற்பத்தி செய்யப்பட்ட போலி ஆவணங்கள் என்பதால்தான்

என்னால் குறியீடு செய்யப்படாமல் தாசில்தார் வாயிலாக குறியீடு செய்துள்ளேன் என்றாலும், நான் தாக்கல் செய்தால் அதற்கான விபரங்கள் குறிப்பிட்டு சொல்லப்பட வேண்டும் என்பதாலும், மேற்படி ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, வருவாய்துறை ஆவணங்கள் என்பதாலும், வருவாய்துறை அதிகாரியால் வழங்கப்பட்டுள்ளது என்பதாலும் தாசில்தாரை பிரதிவாதி தரப்பில் சாட்சியாக விசாரிக்க அழைத்ததன் பேரில் அவர் வாயிலாக குறியீடு செய்யப்பட்டது.

19) வா.சா.ஆ.16 பட்டா எண்.803 சர்வே எண். 212/14 விஸ்தீரணம் 5 ஏர்ஸ், வா.சா.ஆ.17 ஆனது மேற்படி சர்வே எண்ணிற்கான அ பதிவேடு, வா.சா.ஆ.18 பட்டா எண்.723, சர்வே எண்.212/12, விஸ்தீரணம் 10.50 ஏர்ஸ், வா.சா.ஆ.19 சர்வே எண்.212/12க்கான அ பதிவேடு ஆகும். வா.சா.ஆ.16 மற்றும் 18 எந்த சொத்திற்குரிய மூல பட்டா என்றால் வழக்கு சொத்துக்களுக்கான சர்வே எண்.531/34, 35, 36க்கானதாகும். வழக்கு சொத்துக்களான மேற்படி சர்வே எண்.531/34, 35ஆனது எந்த சர்வே எண்ணுக்குள் கட்டுப்பட்டது என்றால் பழைய சர்வே எண்.212/14பா–க்குள் கட்டுப்பட்டது. சர்வே எண்.531/36ஆனது பழைய சர்வே எண்.212/12பா–க்குள் கட்டுப்பட்டது. வா.சா.ஆ.10 முதல் 19 ஆவணங்கள் வழக்கிற்கு தொடர்பில்லாத ஆவணங்கள் என்றாலும், வழக்கு சொத்திற்கும், ஆவணங்களுக்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் சரியல்ல.

20) நான் ஏற்கனவே அரசு வழங்கிய நத்தம் பட்டாவைதான் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.4ஆக தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் மேற்படி ஆவணங்களுக்கு தொடர்புடைய ஆவணங்கள் என்று தெரிவித்து வா.சா.ஆ.10 முதல் 19 ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், ஆனால் அது வழக்கிற்கு தொடர்பற்ற ஆவணங்கள் என்றாலும் சரியல்ல. நான் இந்த வழக்கில் கோரி உள்ள பரிகாரத்திற்கு தொடர்பு இல்லாத ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதியின் கிரைய சொத்தை அபகரிக்க வேண்டும் என்று வா.சா.ஆ.10 முதல் 19 வரையிலான ஆவணங்களை

உற்பத்தி செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**<u>நீதிமன்ற அனுமதியின் பேரில் வாதி தரப்பில் மறு விசாரணை</u>**

21) வழக்கு சொத்துக்களுக்கான பட்டாக்களானது எனது மூதாதையர் நல்லதம்பியா பிள்ளை பெயருக்கு பட்டா வழங்கப்பட்டு அதன் பிறகு எனது அப்பா சுப்பிரமணியன், பெரியப்பா அருணாச்சலம் பிள்ளை வகையரா பெயரில் பட்டா ஏற்பட்டு எனது தகப்பனார் காலத்திற்கு பிறகு என்னால் அனுபவம் செய்து வரப்பட்டுள்ளது என்றால் சரிதான். **(1ம் பிரதிவாதி தரப்பில் ஏற்கனவே வாதி இது தொடர்பாக சாட்சியம் அளித்துள்ளதால் மேற்படி மறுவிசாரணை குறித்து ஆட்சேபணை தெரிவித்தார்.)**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் சொல்லப்பட்டு தட்டச்சரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு சாட்சி சரி என்று ஒப்புக் கொண்டு என் முன்னிலையில் 10.07.2026 கையெழுத்து செய்துள்ளார்.

Tmt.J.Aafreen Begum, M.Com., L.L.M.,

Digitally signed by Tmt.J.Aafreen Begum, M.Com., L.L.M.,
Date: 2026.07.10 15:04:09 +0530

மா.உ.ம.நீ.நடுவர், நத்தம்.